டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 15.05.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 31 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 271 - Madurai | Online Edition

# இந்தியாவில் மேற்கொள்ளப்படும் ஜவுளி மறுசுழற்சி குறித்த சமீபத்திய ஊடக அறிக்கைக்கான மறுப்பு

புது தில்லி, மே 14

நாட்டில் பானிபட் (ஹரியானா) போன்ற இடங்களில் மேற்கொள்ளப்படும் ஜவுளி மறுசுழற்சியை சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச ஊடக அறிக்கை, இந்தியாவில் உள்ள ஜவுளி மறுசுழற்சி சூழல் அமைப்பு பிரிவுகளுடன் தொடர்புடைய சூழல் மற்றும் தொழில்சார் அம்சங்களின் மீது கவனம் செலுத்தியுள்ளது. எந்தவொரு தொழில் துறை சூழலிலும் அவ்வப்போது விதிமீறல் நிகழ்வுகள் ஏற்படும் என்றாலும், இந்தியாவின் ஒட்டுமொத்த ஜவுளித்துறையின் மீது இத்தகையக் குற்றச்சாட்டுகளை கூறுவது ஒருதலைபட்சமானதும், தவறானதுமாகும். இது நாடு முழுவதும் மற்கொள்ளப்பட்டு வரும் ஒழுங்குமுறை வலுப்படுத்துதல், தொழில்நுட்ப அணுகல் மற்றும் நீடித்த தன்மை சார்ந்த தலையீடுகளை பிரதிபலிப்பதாக இல்லை.

ஜவுளிப் பொருட்களை மீண்டும் பயன்படுத்துதல், மறுவேலைப்பாடு, மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றுக்கான நீண்டகாலமாக நிறுவப்பட்ட மதிப்பு சங்கிலிகளால் ஆதரிக்கப்படும் உலகின் மிகப்பெரிய ஜவுளி மீட்பு மற்றும் மறுசுழற்சி கட்டமைப்புகள் இந்தியாவில் உள்ளது என்பதை இங்கே குறிப்பிடலாம்.

ஜவுளிக் கழிவுகளைப் பெரும்பாலும் நிலத்தில் புதைக்கும் பல்வேறு நாடுகளைப் போலின்றி இந்தியாவில் ஜவுளி கழிவுகளில் பெரும்பகுதி முறையான மற்றும் முறைசார் அமைப்புகள் மூலம் மீட்கப்பட்டு, இரண்டாம் நிலைப் பயன்பாடு, தொழில்துறை பயன் பாடு மற்றும் அதுசார்ந்த பயன்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் ஜவுளி அமைச்சகம் அளித்துள்ள ஜவுளிக் கழிவுகள் விநியோகச் சங்கிலியின் அறிக்கையின்படி, உற்பத்தி நிலையில் உருவாகும் கழிவுகளும், பயன்படுத்தப்பட்ட பிறகு தூக்கி எறியப் படும் கழிவுகளும் சேர்த்து ஆண்டுக்கு சுமார் 7,073 கிலோ டன் அளவிலான ஜவுளிக் கழிவுகள் உருவாகிறது. உற்பத்தி நிலையில் உருவாகும் கழிவுகளில் சுமார் 97 சதவீதம் மறுசுழற்சி செய்யப் படுகிறது.

# நில உடைமை விவரங்களை இன்றைக்குள் பதிவு செய்ய வேண்டும் : வேளாண்மை உதவி இயக்குனர் வேண்டுகோள்

சேலம், மே 14

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் விவசாயிகள் அரசு திட்டங்களில் பயன் அடைய நில உடைமை விவரங்களை வருகிற 15ஆம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும் என அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியிருப்ப தாவது, வேளாண் அடுக்குத் திட்டம் விவசாயிகளின் அரசின் பல்வேறு திட்ட பலன்களை பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற ஆவணங்களை ஒவ்வொரு முறையும் சமர்பிப்பதை தவிர்க்கவும், அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெறவும், அனைத்து விவரங்களையும் மின்னணு முறையில் சேகரிக்க வேளாண் அடுக்கு த்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் பல்வேறு பயிர்களை சாகுபடி செய்து வரும் அனைத்து விவசாயிகளும் இந்த திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். 15-ம் தேதி கடைசி நாள் அதற்கு விவசாயிகளின் பதிவு விவரங்கள் ஆதார் எண், கைபேசி எண், நிலஉடைமை விவரங்களை இணைக்கும் பணிகள் தற்போது நடந்து வருகின்றன. இதற்கு விவசாயிகள் அருகில் உள்ள இ-சேவை மையங்களில் வருகிற 15-ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ளலாம். இந்த விவரங்கள் மூலம் ஒவ்வொரு விவசாயிக்கும் ஆதார் எண் போன்ற தனித்துவமான தேசிய அளவிலான அடையாள எண் வழங்கப்படும்.

மேலும், விவரங்களுக்கு வட்டார வேளாண்மை மற்றும் தோட்டக் கலை உதவி இயக்குனர் அலுவலகங்கள் அல்லது தங்கள் கிராமத் திற்கு உரிய உதவி வேளாண்மை அலுவலர்கள் அல்லது உதவி தோட்டக்கலை அலுவலர்களை அணுகலாம். வெளிமாநிலம் வெளி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் செல்போன் மூலம் ஓ.டி.பி பெற்று பதியலாம் என அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப்பிரியா தெரிவித்துள்ளார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நெற்பயிரில் சுற்றுப்புறச் சூழல் பகுப்பாய்வு குறித்த பண்ணைப் பள்ளி நடைபெற்றது



இராணிப்பேட்டை, மே 14

இராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டாரம், வேளாண்மைத் துறை அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்மை உதவி இயக்குநர் அருணா குமாரி தலைமையில் கீழ் வெங்கடாபுரம் கிராமத்தில் நெற்பயிரில் சுற்றுப்புறச் சூழல் பகுப்பாய்வு குறித்த பண்ணைப் பள்ளி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் பேசுகையில் விவசாயிகள் மண் வளம் காக்க இயற்கை விவசாயம் மற்றும் பசுந்தாள் உரம் சாகுபடி செய்து பயனடைய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பயிற்சியில் கலந்து கொண்ட தொன் போஸ்கோ கல்லூரி உழவியல் பேராசிரியர் முனைவர் செல்வகுமார், நெற்பயிரின் வளர்ச்சி, மகசூல் மற்றும் ஆரோக்கியத்தை நிர்ணயிப்பதில் சுற்றுப்புறச் சூழல் காரணிகளான காலநிலை மாற்றம், மண், நீர் மேலாண்மை மற்றும் உயிரியல் காரணிகளின் பங்கு குறித்தும் இந்த காரணிகளை சரியாக மேலாண்மை செய்வதன் மூலமும், தழைச்சத்து உரங்களை தேவைக்கேற்ப பயன்படுத்துவதன் மூலமும், நீர் மேலாண்மையை (காய்ச்சலும், பாய்ச்சலும்) சரியான முறைப்படுத்துவதின் மூலமும் நெற்பயிரில் நோய் தாக்குதலை குறைத்து அதிக மகசூல் பெறலாம் என கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி நெற்பயிரில் வரப்பு பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து பேசினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் முகிலன் செய்திருந்தார்.

பண்ணைப் பள்ளியில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## குழந்தைகளுக்கான ஆரோக்கியமான / வயது வரம்பிற்கேற்க ஸ்நாக்ஸ் வகைகள்

நேற்றைய தொடர்ச்சி...

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு சத்தான மற்றும் சுவையான ஸ்நாக்ஸ் மிகவும் அவசியம். இங்கே பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான ஆரோக்கியமான ஸ்நாக்ஸ் குறிப்புகள் தொகுத்து அளித்துள்ளேன்.

**3. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான ஸ்நாக்ஸ் குறிப்புகள்**

பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு நாள் முழுவதும் ஆற்றல் தேவைப்படும். அவர்களின் உடல் மற்றும் மூளை வளர்ச்சிக்கு உதவும், நீண்ட நேரம் பசி தாங்கக்கூடிய ஸ்நாக்ஸ்களை வழங்க வேண்டும். பள்ளிக்கு எடுத்துச் செல்லக்கூடிய வகையிலும் இருக்க வேண்டும்.



**பழ சாலட்**

பல வகையான பழங்களை (ஆப்பிள், திராட்சை, மாதுளை, ஆரஞ்சு) கலந்து சாலட் செய்து கொடுக்கலாம். வைட்டமின்கள் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்தது.

**காய்கறி கட்லெட்/பர்கர்**



சத்தான காய்கறிகளை (பட்டாணி, கேரட், பீன்ஸ், உருளைக்கிழங்கு) கொண்டு கட்லெட் அல்லது பர்கர் செய்து கொடுக்கலாம். முழு கோதுமை பன்னை பயன்படுத்தலாம்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# பயிர்களுக்கு இளஞ்சிவப்பு நிறமியுடைய மெத்தைலோ பாக்டீரியத்தின் (பி.பி.எப்.எம்) முக்கியத்துவம் மற்றும் பயன்கள்

கோடை காலத்தில் பயிர்களை வறட்சியிலிருந்து பாதுகாக்க இளஞ்சிவப்பு நிறமியுடைய மெத்தைலோ பாக்டீரியத்தின் (பி.பி.எப்.எம்) பயன்பாடு குறித்து திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர், பூ.வசந்தா தெரிவித்து உள்ளதாவது.

இளஞ்சிவப்பு நிற மெத்திலோபாக்டீரியா (PPM-Pink-Pigmented Facultative Methylotrophs) என்பது ஒரு திரவ உயிர் உரம். இது வறட்சியைத் தாங்கி பயிர்கள் வளரவும், மகசூலை அதிகரிக்கவும் பெரிதும் உதவுகிறது. இது பி.பி.எப்.எம் (பிங்க் பிக்மன்டட் பேகல்டேடிவ் மெத்தலோடிரோப்) என்றும் ஆங்கிலத்தில் சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. இப்பாக்டீரியாக்கள் மெத்தனால், மெத்தைல், அமீன், பார்மால்டிஹைடு மற்றும் கரியமில வாயுவை உட்கொண்டு உயிர் வாழக்கூடியவை. மெத்தைலோ பாக்டீரியா இலைகளில் இருப்பதால், இலை துவாரம் (ஸ்டோமேட்டா) மூலம் வெளியாகும் மெத்தனாலை உணவாக உட்கொண்டு வாழ்கின்றது. இதன் காரணமாக பி.பி.எப்.எம் வகை பாக்டீரியாக்கள் இலையின் மேற்பரப்பில் அதிக அளவு காணப்படுகின்றன.

**மெத்தலோ பாக்டீரியத்தின் பயன்கள்**

பயிரின் வளர்ச்சி ஊக்கிகளான ஆக்ஸின், ஜிப்ரலின் மற்றும் சைட்டோகைனின் உற்பத்தி செய்வதால், விதைகளின் முளைப்புத்திறன் நாற்றுகளின் வீரியம் மற்றும் வளர்ச்சி செடிகளின் வளர்ச்சி போன்றவற்றை ஊக்குவிக்கின்றது. ஏசிசி–டீ–அமினேஸ் என்ற நொதியின் மூலம் இடர்பாடான சூழலில் உருவாகும் எத்திலீன் அளவை குறைத்து பயிருக்கு வறட்சி தாங்கும் தன்மையை அளிக்கின்றது. தொடர் உபயோகிப்பால் நீர் பாசத்தின் எண்ணிக்கை குறைக்க உதவுகிறது. 10 சதவீதம் வரை பயிரின் மகசூலை அதிகரிக்கின்றது. பயிரின் வளர்ச்சி அதிகப் படுவதாலும், நொதிகளை உற்பத்தி செய்வதாலும், தழைச் சத்தின் உபயோகிப்புத் தன்மையை அதிகப்படுத்துகின்றது.

வறட்சி காலங்களில் இலைவழி தெளிப்பு செய்வதால் மூன்று வாரங்கள் வரை பயிரின் பசுமைத் தன்மையை பாதுகாக்கின்றன. சொட்டு நீர்ப் பாசன முறையில் அளிக்க ஏதுவானது. இது அனைத்து வகையான பயிர்களுக்கும் ஏற்றது. அதிகாலை அல்லது மாலை வேளைகளில் மட்டும் தெளிக்க வேண்டும். பொதுவாக ஒரு ஏக்கருக்கு 200 மி.லி. பி.பி.எப்.எம் (PPFM) திரவத்தை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். பயிர் வளர்ச்சியின் முக்கியமாக நிலைகளில் தெளிக்க வேண்டும்.

**நெல்லில் அதிக வெப்பநிலைத் தாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள்**

இலை வழித் தெளிப்பாக 3 சதவிகிதம் கயோலின் (Kaolin) அல்லது 1 சதவிகித பொட்டாசியம் குளோரைடு (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம்) கரைசலை குறிப்பிட்ட வளர்ச்சி பருவம் முறையே தூர் கட்டும், கதிர் உருவாகும் மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும்.

பி.பி.எப்.எம் (மெத்தைலோ பாக்டீரியம்) நுண்ணுயிர் உரம் (PPFM) பயன்படுத்த வேண்டும். விதை நேர்த்தி செய்ய 5 கிலோ விதைக்கு 200 கிராம், அடியுரமாக மண்ணில் இட எக்டருக்கு 2 கிலோ, இலை வழி தெளிப்பான் எக்டருக்கு 500 மில்லி லிட்டர் வீதம் கதிர் உருவாகும் மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும்.

இலை வழி தெளிப்பாக 2 சதவிகிதம் மோனோ அமோனியம் பாஸ்பேட் மற்றும் 1 சதவிகிதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலை, பூப்பதற்கு 15 நாட்கள் முன்பாக மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிப்பதன் மூலம் தானிய எடை மற்றும் உற்பத்தியை அதிகரிக்கலாம்.

குறுவை பட்டத்தில் இலை வழித் தெளிப்பாக 1 சதவிகிதம் பொட்டாசியம் குளோரைடு + 500 பிபிஎம் சைக்கோசெலை (CCC) பயிர் வளர்ச்சி பருவத்தில் (தூர் கட்டுதல் மற்றும் கதிர் உருவாகுதல்) தெளிக்க வேண்டும் என தெளிக்க வேண்டும் என திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா தெரிவித்துள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சீர்மிகு வாழ்விற்கு சிறுதானியம்



பெரம்பலூர், மே 14

தமிழ்நாட்டில் சிறுதானியங்கள் (Minor Millets) ஆரோக்கிய மான மற்றும்பாரம்பரிய உணவாக கருதப்படுகின்றன. வரகு, சாமை, தினை, குதிரைவாலி, பனிவரகு, கம்பு மற்றும் கேழ்வரகு போன்றவை முக்கிய சிறுதானிய வகையாகும். இவை நார்ச்சத்து, புரதம் மற்றும் இரும்புச்சத்து நிறைந்தவை. நீரிழிவு மற்றும் உடல் பருமன் கட்டுப்பாட்டிற்கு இவை சிறந்த உணவாகும். சிறுதானியங்கள் பழந்தமிழர் உணவில் பெரும் பங்கு வகித்தது என்பதை பல்வேறு சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. இவை குறைந்த இடுபொருள் செலவில் பயிரிடக் கூடியவை மற்றும் வறட்சியை தாங்கக் கூடியவை. எனவே வறண்ட பகுதிகளில் பயிரிடஏற்றவை. (வரகு, கம்பு, சாமை, தினை பயிர்கள் வறட்சியை தாங்கும் வகையில் சிறப்பாக உள்ளன).

### சிறுதானிய ஊட்டச்சத்துகள்

சிறுதானியங்களில் மக்னிசியம், கால்சியம், பாஸ்பரஸ், நார்ச்சத்து, பி வைட்டமின்கள் போன்ற நுண்ணூட்டச் சத்துக்கள் நிறைந்துள்ளன. இவற்றை சாப்பிடுவதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்பு சத்தி அதிகரிக்கவும், கொழுப்புச்சத்து குறையவும், உடல் பருமன் ஏற்படாமல் பாதுகாத்து கொள்ளவும் ஏதுவாகிறது.

### சுற்றுசூழலுக்கு உகந்தது

சிறுதானியங்கள் நெல் போன்ற தானிங்களைவிட சுற்றுச் சூழலுக்கு நன்மையானவை. ஏனெனில் அவை குறைந்த நீரை பயன்படுத்துகின்றன மற்றும் குறைந்த உரம் தேவைப்படுகிறது. புவி வெப்பமாதலால் ஏற்படும் இழப்புகள் சிறுதானியத்தில் மிகவும் குறைவு. சிறுதானிய பயிர்கள் அனைத்தும் இரவு 12 மணி முதல் அதிகாலை 4.30 மணிக்குள் மகரந்தச் சேர்க்கையை முடித்து கொள்வதால், வெப்பநிலை பிரச்சனைகள் இல்லாமல் முழுமையான மகரந்த சேர்க்கை நடைபெற்று அதிக மகசூல் கிடைக்கும்.

### கோபுர கலசத்தில் சிறுதானியம்

ஒரு விதையின் முளைப்புத் திறன் அதன் ஈரப்பதம், சுற்றுப்புற வெப்பநிலை மற்றும் சேமிக்கப் பயன்படுத்தப்படும் கலன்கள் ஆகியவற்றைப் பொருத்து பாதிக்கப்படும் என்பதை நன்கு அறிந்த நமது முன்னோர்கள், விளைவித்த தானியத்தை தேவையான பக்குவத்தில் காய வைத்து மற்கூறிய காரணிகளால் பாதிக்காத வகையில் தாமிரம், பித்தளை போன்ற உலோகங்களால் தயாரிக்கப் பட்ட கோயில் கோபுரக் கலசங்களில் சேமித்து வைத்துள்ளனர். இவ்வாறு சேமித்து வைக்கப்படும் விதைகளின் முளைப்புத்திறன் 12 ஆண்டுகள் வரை நீடித்து இருக்கும். அதன்பிறகு அதன் முளைப்புத்திறன் பாதிக்கப்படும் என்பதால் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை கோயில் கோபுரக் கலசத்திலுள்ள பழைய விதைகளை நீக்கி விட்டு புத்தம் புது விதைகளைக் கொண்டு மீண்டும் நிரப்ப வேண்டி கும்பாபிகேம் என்ற நடைமுறையை கொண்டு வந்துள்ளனர் நம் முன்னோர்கள்.

### குறைந்த பயிர் காலம்

பெரும்பாலான சிறுதானியங்கள் பயிரிடப்பட்டு மிககுறுகிய காலத்தில் (60-120 நாட்கள்) அறுவடைக்கு வந்துவிடும். மிதமான தட்ப வெப்பநிலையிலும் மண்வளம் குறைந்த இடங்களிலும் சாகுபடி செய்யலாம். சிறு தானியங்களில் பூச்சி நோய் தாக்குதலும் குறைவாக காணப்படுகிறது .சிறு,குறு விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதானியங்கள் சாகுபடி பெறும் பங்கு வகிக்கிறது.

### சிறுதானியமே வருங்கால உணவு

பாரம்பரிய உணவு வகைகளில் உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்தினை சிறு தானியங்கள் அளிக்கின்றன என்று உணவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். மேலும் இன்றைய காலச்சூழலான குறைவான மழைப்பொழிவு, குன்றிய மண்வளம், தேவைக்கு அதிக மான உரப் பயன்பாடுமற்றும் அதனால் ஏற்படும் சூழல்கேடுகள், வேளாண் இடுபொருள் விலை ஏற்றம் போன்றவை சிறுதானியமே வருங்கால உணவு என கருத வழிவகுக்கிறது.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களுக்கான விதை பரிசோதனை நிலையமானது பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் மாவட்ட மைய நூலகம் மேல்புறம், துறை மங்கலம், பெரம்பலூர் 621 220 என்ற முகவரியில் செயல்படுகிறது. விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு பணி விதை மாதிரிக்கு ரூபாய் எண்பது (80/-) பரிசோதனை கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம் குவியல் எண் ஆகியவை குறித்த விபர சீட்டுக்களுடன் அனுப்பி விதைகளை பரிசோதனை செய்து பயன்பெறலாம்.

சிறுதானியங்களின் குறைந்தபட்ச முளைப்புத்திறன் 75% ஆகவும் அதிகபட்ச ஈரப்பதம் 12% மற்றும் குறைந்தபட்ச புறத்தூய்மை 97% இருத்தல் அவசியம்.சிறுதானியங்களை விதைப்பதற்கு முன்பு தரமான விதைகளாக உள்ளனவா என்பதை அறிய விதைபரிசோதனை மேற்கொள்ளலாம்.

பரிசோதனையின் போது தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், ஈரப்பதம் மற்றும் புறத்தூய்மை ஆகியவை ஆய்வு செய்யப்பட்டுபரிசோதனை முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன என பெரம்பலூர் விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் ஆ ஷைலதா தெரிவித்துள்ளார்.




# மண் வளத்தை காக்க கோடை உழவு! வேளாண் அதிகாரி வேண்டுகோள்!!

அரியலூர், மே 14

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் தங்களின் நிலத்தின் மண் வளத்தை காக்கவும், நீரின் தேவையை குறைக்கவும் களை கட்டுப்படுத்தவும் கோடை உழவு செய்ய வேண்டும் என விவசாயிகளுக்கு செந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, கோடைகாலத்தில் நிலத்தை உழவு செய்து விடும்போது, கோடை மழையால் கிடைக்கும் மழைநீர் மண்ணுக்குள் சென்று மண்ணில் காற்றோட்டம் அதிகமாகி நுண்ணுயிர் எண்ணிக்கை பெருகி, மண்வளமாகும்.

கோடையில் பெய்யும் மழைநீர் மண்ணுக்குள் ஈரத்தன்மை அதிகரிக்கப்படுகிறது. விவசாயிகள் கோடை மழை நீரை மண்ணில் சேமிக்க நிலத்தை உழுது தயாராக வைத்திருக்க வேண்டும். கோடை உழவு செய்யாத நிலத்தில் மண்ணில் அடி ஆழத்தில் உள்ள நீர் வெயிலின் தாக்கத்தால் இழுக்கப்பட்டு மண்ணின் மேற்பரப்பை நோக்கி வந்து ஆவியாகி விடுகிறது. இதனால் பயிர் செய்யும் நிலத்தின் மேல் மண் வறண்டு, உலர்ந்து கட்டியாக மாறிவிடுகிறது. ஆனால் கோடை உழவு செய்த வயலில் மண் சிதைக்கப்பட்டு அங்கு, விசை இல்லாமல் போவதால் நீர் ஆவியாதல் தடுக்கப்படுகிறது. இதனால் அடி மண்ணின் ஈரம் நீண்ட நாட்கள் பாதுகாக்கப்பட்டு மண்வளமுடன் காணப்படுகிறது.

கோடை உழவு செய்வதால் பயிர் கழிவுகள் மண்ணில் மூடப்பட்டு மக்கி விடுகிறது. இதனால் அடுத்து பயிரிடப்படும் பயிர்களுக்கு பூச்சி மற்றும் நோய் பாதிப்பு குறைகிறது. எனவே மண்வளத்தை காக்கவும், நீரின் தேவையை குறைக்கவும் களைகளை கட்டுப் படுத்தவும் கோடை உழவு செய்ய வேண்டும். அனைத்து விவசாயி களும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கோடை உழவு செய்து கொள்ளுமாறு வேளாண்மை உதவி இயக்குநர் ஆ.சாந்தி, செந்துறை வட்டார விவசாயிகளை கேட்டுக்கொள்கிறார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# விவசாய சாகுபடி பணிகளில் சாதனை படைக்கும் பெண்கள்




அந்த காலத்தில் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று சொல்லி பெண்களை வெளி உலகிற்கு காட்டாமல் வீட்டுக்குள்ளேயே பூட்டி வைத்திருந்தார்கள், உண்மையான பெண்கள் விடுதலை அப்போது கிடைக்கவில்லை. அதுபோல 'உத்தியோகம் புருலட்சணம்' என்று கூறி ஆண்கள் மட்டும் வேலைக்கு செல்லும் நிலை இருந்தது.

சமூக சீர்திருத்தவாதிகள் மக்களிடம் முற்போக்கு கருத்துகளை விதைத்து, தொடர் போராட்டத்தின் பயனாக பெண்களின் நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக மாறியது. பெண் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பெண்களும் ஆண்களுக்கு நிகராக சாதிக்க வேண்டும் என்ற தனியாத வேட்கையில் பள்ளி, கல்லூரி சென்று படிக்க தொடங்கினர். நமது முற்போக்கு சீர்திருத்தவாதிகள் போட்ட வித்து இன்று ஆல் போல தழைத்து அருகு போல செழித்துள்ளது. இதனுடைய எதிரொலியாக பெண்கள் இன்று விவசாயப்பணி மற்றும் அரசு பணிகளில் வேலை வாய்ப்பை பெற்று பாரதியின் கனவை நனவாக்கி வருகின்றனர் என்றால் மிகையல்ல.

### வேளாண்மையில் பெண்களின் பங்கு

நீடித்த நிலையான வேளாண்மையில் பெண்களின் பங்கு அளப்பரியது. இந்தாண்டு 2026 'சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டாக' கடைபிடிக்கப்பட்டு விவசாய பணிகளில் ஈடுபடும் பெண்களுக்கு அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. வயல்களில் நாற்று நடுவது தொடங்கி நீர்ப்பாசன வேலை, உழவு பணி மற்றும் அறுவடை பணிகள், விற்பனை வரை பெண்களே முன்னின்று செயல்படுகின்றனர்.

அதுமட்டுமல்ல நவீன வேளாண் இயந்திரங்களை இயக்குவதிலும், வானில் டிரோன் பறக்கவிட்டு பயிர்பாதுகாப்பு பணிகள் செய்வதிலும் பெண்களே முன்னின்று ஆண்களுக்கு நிகராக செய்வதை நாம் கண்கூடாக பார்க்கிறோம் என்பதில் யாருக்கும் மாற்று கருத்து கிடையாது. ஒட்டு மொத்தமாக இன்று கிராமப்புறங்களில் பெண்கள் இல்லை என்றால் சாகுபடி இல்லை எனலாம். அந்த அளவிற்கு பெண்கள் ஆர்வத்துடன் வேளாண் பணிகளிலும் நவீன தொழில்நுட்பங்களையும் தங்களுடைய வேளாண்மையில் புகுத்தி கூடுதலான வருமானம் பார்த்து வருகின்றனர். அதுமட்டுமல்ல கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மீன் வளர்ப்பு போன்ற பணிகளிலும் உழவர் உற்பத்தியாளர் நிறுவன பணிகளில் இயக்குநராக பணியாற்றிய வருகின்றனர். வேளாண் துறையில் சவால் நிறைந்த வே.உ.அ பணி முதல் வேளாண்மை கூடுதல் இயக்குநர் வரை பெண்களே அதிகமாக உள்ளனர். இவர்கள் சாதனை புரிந்து வருவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். யூகப் புரட்சியாக இருக்கிறது.

முண்டாசு கவி பாரதியின் கனவான 'ஆகாவென்றெழுந்து பார்யூக புரட்சி' இன்று நனைவாகி வருகிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# நடமாடும் மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை ஆய்வகம் துவக்கம்

சேலம், மே 14

சேலம் மாவட்டத்தில் வேளாண்மைத்துறையின் நடமாடும் ஆய்வக வாகனம் மூலம் விவசாயிகளின் கிராமங்களுக்கு சென்று மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை செய்யும் பணி தொடங்கி வைக்கப்பட்டது.

இன்றைய பரபரப்பான உலகில் வேளாண்மைத்துறையின் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப் படுகிறது. அந்த வகையில் விவசாயிகளின் பயண நேரத்தை குறைக்கவும், வேலைப்பளு, உரச் செலவை குறைத்து சரியான சமச்சீர் உரம் இடுவதை உறுதிப்படுத்திடவும், மண்வளம் மற்றும் நீரின் தன்மையைப் பற்றி நன்கு அறிந்து அதற்கு ஏற்றவாறு பயிர் சாகுபடி செய்வதற்கும் சேலம் மாவட்டத்தில் உள்ள கிராமங்களுக்கு நடமாடும் ஆய்வக வாகனம் மூலம் சுழற்சி முறையில் மண் மற்றும் நீர் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. இந்த ஆய்வகத்தின் மூலம் விவசாயிகள் தங்களது நில மண் மற்றும் பாசன நீரை பரிசோதனை செய்து கொள்ளலாம். மண் மற்றும் நீர் பரிசோதனைக்கு தனித்தனியே ரூ.30 கட்டணம் வசூலிக்கப் படும். விவசாயிகள் தங்கள் கிராமங்களிலேயே இந்த சேவையை பெறலாம்.

இந்த நிகழ்ச்சியானது பனமரத்துப்பட்டி வட்டாரம், சந்தியூர் கிராமத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மண் மாதிரி மற்றும் நீர் மாதிரி எவ்வாறு எடுப்பது என்பது பற்றிய செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையம் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் விஜயன், உழவர் பயிற்சி நிலையம் வேளாண்மை துணை இயக்குநர் அருணா, பனமரத்துப்பட்டி வேளாண்மை உதவி இயக்குநர் சாகுல் ஹமீது, சேலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) தனலட்சுமி, மண் பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ராதா ருக்மணி மற்றும் பிரியங்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தரமான விதைத்தேர்வு செய்வது எப்படி! உயர் மகசூல் பெறுவதெப்படி!!

திருநெல்வேலி, மே 14

விவசாய பெருமக்கள் எந்த ஒரு பயிர் சாகுபடி செய்தாலும் அந்தப் பயிரின் விதையின் தன்மை பெறப்பட்ட விதையின் மூலம் இவற்றை அறிந்து பயிர் செய்தால் அதிக மகசூல் பெறலாம். விதைக்க தேர்வு செய்யும் பயிர் ரக விதைகளில் ஒவ்வொரு விதையும் மகசூல் பெருக்கத்தில் முக்கியத்துவம் பெறுகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

விதைக்கப் பயன்படுத்தப்படும் பயிர் ரகங்களில் பிறரக விதைகள் கலவாது இருக்க வேண்டும். ஏனெனில் ரகத்திற்கு ரகம் பயிரின் வளர்ப்புக் காலம் மாறுபடுவதால், அவ்வாறு பிறரக விதைகள் கலந்து இருப்பின், ஒன்றாக கிளை விட்டு வளர்ந்து பூத்து காய்த்து ஒன்றாக அறுவடைக்கு வராது போகும். அந்தந்த பயிர் ரகங் களுக்கு இடவேண்டிய இடுபொருட்களின் தேவை ரகங்களுக்கேற்ப மாறுபடுவதால் பயிருக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்காமல் போவதோடு, வீணாக பிறரகங்களுக்கு சத்துக்கள் இடப்பட்டு சாகுபடி செலவு வீணாகிறது. நெற்பயிர் சாகுபடி செய்வதாக இருந்தால் ஆதார விதையாக வாங்கி விதைத்தால் அதில் 2000 நெல் மணிக்கு பிறரக நெல்மணி ஒன்றுக்கு மிகாமலும் சான்றளிக்கப்பட்ட விதையாக வாங்கி விதைத்தால் அதில் 1000 நெல்மணிக்கு பிறரக நெல்மணிகள் இரண்டுக்கு மிகாமலும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அதன் மூலம் விவசாயிகளின் உழைப்பு மற்றும் இடுபாருட்களான உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளின் பயன்பாடு வீணாகாது.

விதையின் புறத்தூய்மையையும் முக்கியமானதாகும். விதை வாங்கும் போது விதையின் புறத்தூய்மையை பார்த்து கவனமுடன் வாங்க வேண்டும். விளைவித்த விதைகளை சரியாக துப்பரவு செய்யாத போது, விதையுடன் அந்த விதையின் பயிர்க்கழிவுகள்



முழுவதுமாக விளையாத சாவியான விதைகள், மண்துகள்கள் களை விதைகள் மற்றும் பிற பயிர்களின் விதைகள் கலந்து இருக்க வாய்ப்புகள் அதிகம். இவ்வாறு புறத்தூய்மை குறைந்த விதைகளை சரியான விலை கொடுத்து வாங்கி விதைத்தால், வாங்கப்பட்ட விதையின் மொத்த எடையில் மேற்கூறிய பொருட்கள் கலந்து இருந்தால் நல்ல விதைகளாக இருப்பவை மட்டுமே முளைக்கும். இதனாலும் வயலில் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் இழப்பு ஏற்படும். விதையின் புறத்தூய்மை பயிர்களுக்கேற்ப 95 சதவிகிதம் முதல் 98 சதவிகிதம் சுத்தமாக இருக்க வேண்டும். அதாவது 100 கிராம் விதையை கையில் எடுத்து பார்த்தால் 95 முதல் 98 கிராம் அளவில் விதை சுத்தமாக இருக்க வேண்டும்.

அடுத்ததாக விதையின் ஈரப்பதம் சரியான அளவில் இருத்தல் அவசியமாகும். விதைகளில் ஈரப்பதம் அதிகம் இருந்தாலும் குறைவாக ருந்தாலும் விதையின் முளைப்புத்திறன் பாதிக்கும். விதைகளில் இருக்க வேண்டிய ஈரப்பதம் பயிருக்குப் பயிர் வேறுபடும். நெல் விதையில் 13 சதவிதமும், சோளம், மக்காச்சோளம், கம்பு, சிறுதானிய பயிர்களுக்கு 12சதவிதமும், பயறு மற்றும் எண்ணெய் வித்து பயிர்களுக்கு 9 சதவிதமும், கத்தரி, மிளகாய், தக்காளி பயிர்களுக்கு 8 சதவிதமும், கொடிவகைப் பயிர்களுக்கு 7 சதவிதமும் ஈரப்பதம் இருக்க வேண்டும். ஈரப்பதம் அதிகம் இந்த அளவைவிட அதிகரித்தால் விதைகளை பூஞ்சணமும் பூச்சிகளும் தாக்கும். அதனால் விதையின் முளைப்புத்திறன் பாதிக்கும்.

இறுதியாக விதைகளின் முளைப்புத்திறன் ஒவ்வொரு பயிருக்கும் இந்திய அரசால் குறைந்தபட்ச முளைப்புத்திறன் எவ்வளவு இருக்கவேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி மக்காச்சோளத்திற்கு 90 சதவிதமும், நெல், எள், கொள்ளு மற்றும் சணப்புப் பயிர்களுக்கு 80 சதவிதமும், சோளம், கம்பு, சிறுதானியப் பயிர்கள், பயறு வகைகள் உயர்ரக பருத்தி, தக்கைப்பூண்டு மற்றும் அகத்திக்கு 75 சதவிதமும், நிலக்கடலை, சூரியகாந்தி, ஆமணக்கு தக்காளி, கத்தரி மற்றும் வெங்காயத்திற்கு 70 சதவிதமும், நாட்டு ரக பருத்தி, வெண்டை மற்றும் கொத்தமல்லிக்கு 65 சதவிதமும், கொடிவகை பயிர்களுக்கு 60 சதவிதமும் முளைப்புத்திறன் இருக்கவேண்டும். அந்த அளவில் முளைப்புத்திறன் கொண்ட விதைகளே விதைகளாக விற்பனை செய்ய அனுமதிக்கப்படுகின்றன. எனவே விதைத்தேர்வின் போது விவசாயிகள் மிகுந்த கவனம் செலுத்தி மேற்குறிப்பிட்ட விதைகளின் தர நிர்ணயங்களை சரி பார்த்து விதைகளை வாங்கி விதைத்து உயர் மகசூல் பெற திருநெல்வேலி விதைப்பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் ம.மகேஸ்வரன் கேட்டுக் கொள்கிறார்.

# பி.எம்.கிசான் நிதி ஆண்டுக்கு ரூ. 6000/- தொடர்ந்து பெறுவதற்கு நில உடைமை பதிவு கட்டாயம்



புதுக்கோட்டை, மே 14

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள், பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN)-ல் இனிவரும் காலங்களில் தவணைத் தொகைகளை பெறுவதற்கும், உரம் மற்றும் இதர வேளாண் இடுபொருட்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கும் விவசாயிகள் தங்கள் நில விவரங்களை பதிவு செய்து அடையாள எண் பெறுவது கட்டாயமாகும் என புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு. சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, விவசாயிகளின் நலனை பாதுகாக்கவும், அரசின் திட்டங்கள் நேரிடையாக தகுதியுள்ள பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்யவும், விவசாயிகளின் நில உடைமை விவரங்களை பதிவு செய்து அடையாள எண் வழங்கப்பட்டு வருகிறது. விவசாய அடையாள எண் இதுவரை பெறாத விவசாயிகளுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் மே 9-ஆம் தேதி முதல் அனைத்து வட்டாரங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகிறது. இந்த விவசாயிகளின் நில உடைமை விவரங்களை பதிவு செய்து அடையாள எண் வழங்கும் சிறப்பு முகாம்களில் இதுவரை பதிவு செய்திடாத விவசாயிகள் அவர்களின் ஆதார் அட்டை மற்றும் நில ஆவணங்களான பட்டா மற்றும் சிட்டா, ஆதாருடன் இணைக்கப்பட்ட அலைபேசி எண் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு தங்கள் வட்டாரத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களுக்கு சென்று விவசாயி அடையாள எண் பெற இணையதளத்தில் பதிவு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இனி வரும் காலங்களில் விவசாயி அடையாள எண் வைத்துள்ள விவசாயிகளுக்கு மட்டுமே பி.எம்.கிசான் கவுரவ நிதி திட்டத்தில் வழங்கப்படும் வருடத்திற்கு ரூ.6000/- உதவித்தொகை, மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களின் மானியங்கள், மானிய உரங்கள், மானிய விலையில் விதைகள், பயிர் காப்பீடு, இயற்கை பேரிடர் நிவாரணத்தொகை மற்றும் அரசின் இதர மானியங்கள் வழங்கப்படும்.

மேலும், விவசாயிகள் தங்களது பகுதி வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, அட்மா திட்ட பணி யாளர்கள் ஆகிய துறை சார்ந்த அலுவலர்கள் அல்லது அருகில் உள்ள பொது சேவை மையங்களை நேரடியாக அணுகி தங்கள் நில உடைமை விவரங்கள், ஆதார், கைபேசி எண் ஆகிய விவரங்களை அளித்து எவ்வித கட்டணமுமின்றி உடனடியாக பதிவு செய்து கொள்ளலாம். எனவே, கிராம அளவில் நடைபெறும் விவசாய அடையாள எண் பெறுவதற்கு நில உடைமை பதிவு சிறப்பு முகாம் களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.



# விவசாயிகள் நில விபரங்களை உடனே பதிவு செய்ய வேளாண் உதவி இயக்குனர் அழைப்பு

சேலம், மே 14

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் தங்களது நில உடமை விபரங்களை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டும் என்று வேளாண்மைத் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

தலைவாசல் வட்டாரத்தில் புதிய வேளாண்மை உதவி இயக்குனராகப் பொறுப்பேற்றுள்ள வேல்முருகன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,

தலைவாசல் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் அனைவரும் தங்களது நில விபரங்கள் மற்றும் ஆதார் அட்டை ஆகிய ஆவணங்களுடன் தங்கள் பகுதி வேளாண் துறை அலுவல கத்தையோ அல்லது பொது சேவை மையத்தையோ உடனடியாகத் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் பல்வேறு வேளாண்மை மானியங்களைத் தடையின்றித் தொடர்ந்து பெறு வதற்கு விவசாயிகள் இந்தப் பதிவை மேற்கொள்வது கட்டாய மாக்கப்பட்டுள்ளது. எனவே, உழவர்கள் அனைவரும் இந்த அவசியத்தை உணர்ந்து, காலதாமதமின்றி விவசாயிகள் பதிவைச் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# தரமான உளுந்து விதைகளை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்

## விதை ஆய்வு துணை இயக்குநர் எச்சரிக்கை

புதுக்கோட்டை, மே 14

தரமான நல்ல முளைப்பு திறன் உள்ள உளுந்து விதைகளை மட்டுமே நடப்பு பருவத்தில் விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும் என விதை ஆய்வு துணை இயக்குநர் சுஜாதா, தனியார் விதை விற்பனையாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில், தற்போது உளுந்து சாகுபடி தனிப்பயிராகவும், நெல் வயல் வரப்பில் உளுந்து சாகுபடி செய்யும் பணிகளில் தற்போது விவசாயிகள் ஆர்வமுடம் தயாராகி வருகிறார்கள். உளுந்து விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், சான்று பெற்ற சான்று அட்டை பொருத்தப்பட்ட தரமான உளுந்து விதைகளை மட்டுமே விவசாயிகளுக்கு விற்பனை செய்ய வேண்டும் என விதை ஆய்வு துறை மூலம் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு தரமான உளுந்து விதைகள் விற்பனையின் போது, விதைச்சட்ட விதிகள்படி, கொள்முதல் பட்டியலில் விதை விற்பனை உரிமம் எண், ரகம், நிலை, குவியல் எண், காலாவதி நாள், உற்பத்தியாளர் விவரம் உட்பட அனைத்து தகவல்களும் இடம் பெற்றிருக்க வேண்டும். சான்று அட்டை குறிப்பாக ஆதார நிலை மற்றும் சான்று நிலை விதைகளையே விற்பனை செய்யவேண்டும். விதை விற்பனையாளர்கள் தரமான உளுந்து விதைகளின் தரத்தை உறுதிப்படுத்தும் வகையில், உண்மை நிலை விதைகளுக்கு குவியல் வாரியாக விதை மாதிரி பரிசோதனை செய்த முளைப்பு அறிக்கை கண்டிப்பாக தங்களது விற்பனை நிலையங்களில் வைத்திருக்கவேண்டும். மேலும் அரசால் அறிவிக்கை செய்யாத உளுந்து ரகங்களுக்கு முளைப்புதிறன் பரிசோதனை அறிக்கை மற்றும் பதிவுச்ச ான்றிதழ் வைத்திருக்கவேண்டும். விதை விற்பனையின் போது சரியாக கடைபிடிக்காத விற்பனையாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மீது விதைச்சட்டம் 1966 மற்றும் விதை விதிகள் 1968ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும். விதை விற்பனையாளர்கள் கொள்முதல் செய்த உளுந்து விதைகளை பாதுகாப்பாகவும், விதை விற்பனை உரிமம் பெற்ற இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு, சான்று பெற்ற உளுந்து விதைகளான வம்பன் 6, வம்பன் 8, வம்பன் 10, வம்பன் 11, ஏடிடீ 5, டீ 9 போன்ற விற்பனை செய்யும் போது, விற்பனை ரசீது கொடுக்க வேண்டும். அதில், விதையின் பெயர், ரகம், குவியல் எண், காலாவதி நாள் ஆகியவற்றுடன், விவசாயி பெயர், முகவரி மற்றும் விதை வாங்குபவரின் கையொப்பம் பெறப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு, புதுக்கோட்டை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குநர் சுஜாதா தனது செய்திக்குறிப்பில் தனியார் விதை விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# நெல்லில் அதிக வெப்பநிலை தாக்கத்தினை கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்கள்!

இராணிப்பேட்டை, மே 14

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டாரத்தில், தற்போது அதிக வெப்பநிலை மற்றும் வெப்ப அலை நிலவிவருகிறது. வழக்க மான வெப்பநிலையை விட உயர்வது பயிர்களுக்கு வெப்ப அழுத் தத்தை ஏற்படுத்தி, வளர்ச்சி மற்றும் விளைச்சலைக் குறைக்கிறது.

வெப்பமான, ஈரப்பதமான காலநிலையில், நெற்பயிர் நன்றாக வளரும். ஆனால் அதிக வெப்பம், பூக்களில் மகரந்தச் சேர்க் கையைப் பாதித்து விளைச்சலைக் குறைக்கும். நெற்பயிரில் அதிக வெப்பநிலை தாக்கத்தினை கட்டுப்படுத்தும் தொழில் நுட்பங்களை நெற்பயிரிடும் விவசாயிகள் பின்பற்ற வேண்டுமென, வாலாஜா வட்டார வேளாண் உதவி இயக்குனர் திலகவதி தெரிவிக்கின்றார்.

இலைவழித் தெளிப்பாக 3 சதவீதம் கையோளின் அல்லது 1 சதவிகிதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலை (ஒரு லிட்டர் தண்ணீருக்கு 10 கிராம் என்ற விகிதத்தில்) தூர் கட்டும், கதிர் உருவாகும் மற்றும் பூக்கும் பருவத்தில் நெற்பயிரில் தெளிக்க வேண்டும்.

பி.பி.எப்.எம். (மெத்தைலோ பாக்டீரியம்) நுண்ணுயிர் உரத்தை விதை நேர்த்தி செய்ய 5 கிலோ விதைக்கு 200 கிராம், அடியுரமாக மண்ணில் இட எக்டருக்கு 2 கிலோ, இலை வழி தெளிப்பாக எக்டருக்கு 500 மில்லி லிட்டர் வீதம் கதிர் உருவாகும் மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிக்க வேண்டும்.

இலை வழி தெளிப்பாக 2 சதவிகிதம் மோனா அமோனியம் பாஸ்பேட் மற்றும் 1 சதவிகிதம் பொட்டாசியம் குளோரைடு கரைசலை, பூப்பதற்கு 15 நாட்கள் முன்பாக மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிப்பதன் மூலம் தானிய எடை மற்றும் உற்பத்தியை அதிகரிக்கலாம். குறுவை பட்டத்தில் இலை வழித் தெளிப்பாக 1 சதவிகிதம் பொட்டாசியம் குளோரைடு மற்றும் 500 பிபிஎம் சைக்கோசெலை (CCC) பயிர் வளர்ச்சி பருவத்திலும், தூர்கட்டுதல் மற்றும் கதிர் உருவாகும் பருவத்திலும் தெளிக்க வேண்டும்.

மேற்கண்ட தொழில்நுட்பங்களை நெல் பயிரிடும் விவசாயிகள் பயன்படுத்தி தற்போது நிலவி வரும் வெப்ப அலையின் பாதிப்பி லிருந்து நெற்பயிரினை காத்து அதிகமகசூலை பெற வேண்டும் என்று வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக் கொண்டார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# திருவள்ளூர் மாவட்டத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்திறன் – ஒரு ஆய்வு

நேற்றைய தொடர்ச்சி...

மேலே உள்ள அட்டவணையைப் பொருத்தவரை, பதிலளித்தவர்களில் குறிப்பிடத்தக்க பெரும்பான்மையானோர் சந்தை அணுகல் மேம்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். மேம்பட்ட சந்தை அணுகல் மூலம் விவசாயிகள் தங்கள் பொருட்களை எளிதாகவும் திறம்படவும் விற்பனை செய்ய முடிகிறது. இதன் மூலம் அதிகமான வாடிக்கையாளர்களை அடைய முடியும், நடுவணரின் மீது சார்பு குறைகிறது, இதனால் வருமானமும் நிலைத்தன்மையும் உயர்கிறது. பதிலளித்தவர்களில் அதிகபட்சமானோர் குறைந்த செலவில் வேளாண்மை உள்ளீடுகளைப் பெறுவதில் நன்மை அடைந்துள்ளனர். விதைகள், உரங்கள், இயந்திரங்கள் போன்ற உள்ளீடுகள் குறைந்த விலையில் கிடைப்பதால், லாபம் நேரடியாக அதிகரிக்கிறது. இது விநியோக சங்கிலி மேம்பாடு அல்லது அரசு ஆதரவின் மூலம் ஏற்பட்ட மாற்றமாக இருக்கலாம்.

சுமார் 70சதவீதம் பேர் தங்கள் விவசாய விளைபொருட்களுக்கு சிறந்த விலை கிடைக்கிறது என்று தெரிவித்துள்ளனர். இது கூட்டுறவு அமைப்புகள் அல்லது டிஜிட்டல் தளங்கள் மூலம் விலை தகவல் கிடைப்பதாலும், பேசுவார்த்தை சக்தி அதிகரித்ததாலும் ஏற்படுகிறது. இதன் மூலம் விவசாயிகளின் நிதி நிலை மேம்படுகிறது.

அரசு ஆதரவுகளை 55.8 சதவீதம் பேர் எளிதாக பெற முடிகிறது என்று தெரிவித்துள்ளனர். மானியங்கள் மற்றும் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்ததாலும், நிர்வாக செயல்முறைகள் எளிமையாக்கப்பட்டதாலும் இது சாத்தியமாகியுள்ளது. இது விவசாய வளர்ச்சிக்கும் வறுமை குறைப்புக்கும் முக்கியமானது.

நிதி வளங்கள் மற்றும் கடன் வசதிகளுக்கான அணுகல் மேம்பட்டு உள்ளது என்று 46.7சதவீதம் பேர் கூறினர். இது முதலீடு மற்றும் வளர்ச்சிக்கு உதவினாலும், ஆவணங்கள், அடமானம், விழிப்புணர்வு போன்ற தடைகள் இன்னும் நீடிக்கின்றன என்பதை இது காட்டுகிறது.

மதிப்பூட்டல் மற்றும் செயலாக்கத்தில் முன்னேற்றம் கண்டு உள்ளனர் என்று 44.2 சதவீதம் பேர் கூறினர். இது செயலாக்க வசதிகள், பயிற்சி, உள்கட்டமைப்பு ஆகியவற்றின் பற்றாக்குறையை காட்டுகிறது. இருப்பினும், இந்நன்மையை பெற்றவர்கள் உயர்ந்த தரம் மற்றும் அதிக வருமானம் பெற்றுள்ளனர்.

ஐம்பது சதவீதத்திற்கும் மேற்பட்டோர் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பெற்றுள்ளனர். திறன் மேம்பாடு நீண்டகால உற்பத்தி திறன் மற்றும் புதிய தொழில்நுட்பங்களுக்கு தகுந்து செயல்படுவதற்கு அவசிய மானது. எனினும், மேலும் பரவலான பயிற்சி திட்டங்கள் தேவைப் படுகின்றன. இடர் மேலாண்மை ஆதரவுகளைப் 54.2 சதவீதம் பேர் பெற்றுள்ளனர். காப்பீடு, ஆலோசனை சேவைகள், பயிர் பன்மைப் படுத்தல் போன்றவை அபாயங்களை குறைக்க உதவுகின்றன. இதனால் விவசாயத்தில் பாதுகாப்பு அதிகரித்தாலும், மேலும் விரிவாக்கம் செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

### உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

### அட்டவணை – 3

(n=120)

| வ எண் | விவரங்கள் | எண்கள் | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | உறுப்பினர்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு இல்லாமை | 84.00 | 70.0 |
| 2. | கூட்டத்தில் கலந்துகொள்ள ஆர்வம் இல்லாமை | 65.00 | 54.2 |
| 3. | குடும்பத்தரப்பு குறைந்த ஆதரவு | 66.00 | 55.0 |
| 4. | பயிற்சி வசதி போதவில்லை | 45.00 | 37.5 |
| 5. | அடிப்படை வசதிகள் இல்லாமை | 58.00 | 48.3 |
| 6. | சரியான சந்தை தகவல் இல்லாமை | 54.00 | 45.0 |
| 7. | பொதியிடல் மற்றும் அடையாளமிடுதல் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை | 67.00 | 55.8 |
| 8. | இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய (FSSAI) சான்றிதழ் பெறும் நடைமுறை பற்றிய விழிப்புணர்வு இல்லாமை | 62.00 | 51.7 |
| 9. | கடன் வசதி பற்றிய விழிப்புணர்வு இல்லாமை | 54.00 | 45.0 |
| 10. | பயிர் காப்பீடு பற்றிய விழிப்புணர்வு இல்லாமை | 35.0 | 29.2 |
| 11. | விலை மாறுபாடுகள் | 89.00 | 74.2 |
| 12. | வாங்கும் பணம் தாமதமாக கிடைப்பது | 53.00 | 44.2 |
| 13. | உறுப்பினர்களின் மீதான பாதிப்பு | 34.00 | 28.3 |
| 14. | FPO நடவடிக்கைகள் பற்றிய தகவல் பகிர்வு குறைவு | 42.00 | 35.0 |

மேலே உள்ள அட்டவணையிலிருந்து,உறுப்பினர்களின் 70 சதவீதம் அதிக கவலையைக் குறிக்கின்றது என்று பார்க்க முடிகிறது, அதாவது உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் உறுப்பினர் களுக்கு இடையேயான ஒத்துழைப்பு இல்லாமை. தனிப்பட்ட முரண்பாடுகள், நம்பிக்கை குறைவு அல்லது சமமான பங்கு வகிப்பின்மை போன்றவை முடிவெடுப்பில் தடையாக இருக்கலாம் மற்றும் குழுவின் மொத்த செயல்திறனை குறைக்கலாம்.

ஐம்பது சதவீததிற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கூட்டங்களில் கலந்துகொள்ள ஆர்வம் காட்டவில்லை. இது சீராக நடத்தப்படாத கூட்டங்கள், பயன்கள் குறைவு அல்லது நேர ஒத்திசைவு பிரச்சனை களால் ஏற்படலாம். உறுப்பினர்களின் ஆர்வமின்மை தொடர்பு முறைகளை பாதித்து முக்கிய முன்முயற்சிகளில் முன்னேற்றத்தை தாமதப்படுத்துகிறது.

ஐம்பத்து ஐந்து விழுக்காடு உறுப்பினர்கள் குடும்ப ஆதரவில் லாமல் இருந்தது. கலாச்சார அல்லது இல்ல விவகாரப் பொறுப் புகள், குறிப்பாக பெண்களுக்கு, செயலில் ஈடுபடுவதில் தடையாக இருக்கலாம். இல்லத்தில் ஊக்கமின்மை அல்லது பொறுப்புகளின் பகிர்வு குறைவு FPO நடவடிக்கைகளில் பங்கு பெறுவதை குறைக்கும்.

குறைந்த விழுக்காடு (37.5சதவீதம்) உறுப்பினர்கள் பயிற்சி வசதி குறைவு என்று குறிப்பிட்டனர், இது திறன் மேம்பாட்டில் ஒரு இடை வெளியை காட்டுகிறது. தரமான பயிற்சி திட்டங்கள் இல்லாமல் இருப்பது செயல்திறன், தரக் கட்டுப்பாடு மற்றும் சந்தை தேவை களுக்கு ஏற்ற மாற்றம் செய்வதில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஐம்பது சதவீதம் குறைவானவர்கள் கட்டமைப்பை சுட்டிக் காட்டினர். பாதுகாப்பு, செயலாக்க அலகுகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் இல்லாமை நேரடியாக பிந்தைய காப்பு, சந்தை அணுகல் மற்றும் லாபத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

சந்தை தகவல் குறைவு 45 விழுக்காடு உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. விலை, தேவைகள் மற்றும் போட்டியைப் பற்றிய நேரடி தரவுகளுக்கு அணுகல் இல்லாமல் இருப்பது தவறான விலை தீர்மானங்கள் மற்றும் சந்தை வாய்ப்புகளை இழக்க ஏற்படுத்தும்.

ஐம்பத்து ஐந்து சதவீதம் பேர் பொதியிடல் மற்றும் அடையாள மிடுதல் பற்றிய தரநிலைகள் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருந்தனர். சரியான பொதியிடல் மற்றும் அடையாளமிடுதல் சந்தைக்கேற்ற தன்மையும் சட்டப்படியான ஏற்பாட்டிற்கும் முக்கியம். இவ்வித அறிவின்மை தயாரிப்பின் கவர்ச்சியையும் ஏற்றுமதி சந்தைகளில் நுழைவையும் குறைக்கும்.

ஐம்பத்து ஐந்து சதவீதம் மேற்பட்டவர்கள் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய (FSSAI) சான்றிதழ் பெறும் நடைமுறை பற்றிய விழிப்புணர்வு நடைமுறைகளை அறியவில்லை. உணவு பாதுகாப்பு ஏற்பாட்டிற்கு சான்றிதழ் அவசியம். இதைப் இல்லாமல், தயாரிப்பாளர்கள் கட்டுப்படுத்தப்பட்ட சந்தைகளில் சேர முடியவில்லை. இது ஒழுங்குநிலைப் பயிற்சி மற்றும் ஆதரவு தேவையை காட்டுகிறது.

கடன் வசதிகள் பற்றிய அறிவின்மை 45 சதவீதம் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. நிதி அறிவு குறைவு அல்லது நிறுவனங்களின் குறைபட்ட தகவல் தொடர்பு உறுப்பினர்கள் கடன் அல்லது உதவித் தொகைகளைப் பெறுவதை தடுக்கும், முதலீடு செய்வதில் அல்லது செயல்பாட்டை விரிவாக்குவதில் தடையாக அமையும்.

குறைந்த விழுக்காடு உறுப்பினர்கள் (29.2சதவீதம்) பயிர் காப்பீடு பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருந்தனர். எண்ணிக்கை குறைவாக இருந்தாலும், இதன் மூலம் முக்கிய பகுதி இன்னும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பு அறியவில்லை என்பதை காணலாம்.

பெரும்பாலான உறுப்பினர்கள் (74.2சதவீதம்) விலை நிலைத்தன்மை இல்லாமையாள் சிக்கல்களை எதிர்கொண்டனர். வேளாண்மை சந்தைகளில் மாற்றமிகு விலைகள் உறுதிப்படுத்தப்படாதது மற்றும் வருமான பாதுகாப்பின்மை ஏற்படுத்துகிறது. விலை நிலைத்தன்மை மற்றும் சந்தை இணைப்புகளுக்கான அவசர தேவையை இது காட்டுகிறது.

வாங்கும் பணம் தாமதமாக கிடைக்கிறது என்று 44.2 சதவீதம் பேர் பிரச்சனை எனக் கூறினர். நிதி ஓட்டம் தாமதமாகக் கிடைப்பது அடுத்த பயிர் சுழற்சிக்கு முதலீடு செய்யாமல் போதுவதை தடுக்கும் மற்றும் வாங்குபவர்களோடு அல்லது நிறுவனங்களோடு நம்பிக்கையை குறைக்கும். இது ஒப்பந்தம் செயல்படுத்தல் குறைவு அல்லது இடைநிலையோரின் அதிகாரம் அதிகரிப்பை காட்டுகிறது.

உறுப்பினர்களின் சிலரின் உள் அதிகார தாக்கத்தால் அதிகார சமநிலை இல்லாமல் இருக்கிறது என்று 28.3 சதவீதம் பேர் மட்டுமே கூறினர். இதனால் உறுப்பினர்களின் பங்கேற்பு குறைகிறது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகள் பற்றிய தகவல் பகிர்வு குறைபாடு இருப்பதாக 35விழுக்காடு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். இது உறுப்பினர்களிடையே நம்பிக்கையின்மையை உருவாக்கி, குழு ஒருங்கிணைப்பை பாதிக்கிறது.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்த பங்குதாரர்களின் முக்கிய பரிந்துரைகள்**

### 1. திறன் மேம்பாடு மற்றும் திறன் வளர்ச்சி

- கீழ்க்கண்ட துறைகளில் வழக்கமான பயிற்சிகள் நடத்துதல்:
- வணிக மேலாண்மை
- நிதி அறிவு மற்றும் பதிவுகள் பராமரிப்பு
- சிறந்த விவசாய முறைகள் மற்றும் அறுவடை பிந்தைய மேலாண்மை
- சந்தைப்படுத்தல் மற்றும் மதிப்புச் சங்கிலி புரிதல், தன்னார்வ அமைப்புகள், வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் வேளாண்மை பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல் படுதல்
- வெற்றிகரமான உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு மாவட்டம்/மாநில அளவில் வெளிப்படையான பயணங்கள் ஏற்பாடு செய்தல்

### 2. சந்தை இணைப்புகளை வலுப்படுத்துதல்

- வாங்குபவர்கள், சில்லறை விற்பனையாளர்கள், செயலாக்க நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் நேரடி தொடர்புகள் ஏற்படுத்துதல்
- இடைநிலையாளர்களை குறைக்க வாங்குபவர் - விற்பனை யாளர் சந்திப்புகள் நடத்துதல்
- தேவையான இடங்களில் ஒப்பந்த விவசாயம் மற்றும் நிறுவன விற்பனை வாயில்களை ஊக்குவித்தல்

### 3. நிதி அணுகல் மற்றும் கடன் வசதி

- வங்கிகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் மூலம் எளிதான கடன் வசதியை உறுதி செய்தல்
- டிஜிட்டல் கணக்குப்பதிவு, வெளிப்படைத்தன்மை மற்றும் முறையான கணக்காய்வை ஊக்குவித்து நம்பகத்தன்மையை உயர்த்துதல்
- அரசு கடன் உத்தரவாத திட்டங்கள் மற்றும் மானியங்களை பயன்படுத்த வழிகாட்டுதல்

### 4. கட்டமைப்பு மேம்பாடு

**கூட்டு அடிப்படையில் கீழ்க்கண்ட வசதிகளை உருவாக்குதல் :**

- கிடங்குகள் மற்றும் சேமிப்பு வசதிகள்
- குளிர்சாதன சேமிப்பு நிலையங்கள்
- முதன்மை செயலாக்க மையங்கள்
- போக்குவரத்து வசதிகளில் முதலீடு செய்து செலவு மற்றும் அறுவடை பிந்தைய இழப்புகளை குறைத்தல்

**5. தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு**

- மொபைல் மற்றும் டிஜிட்டல் தளங்களை பயன்படுத்துதல்:
- வானிலை முன்னறிவிப்பு
- பயிர் ஆலோசனை
- சந்தை விலை தகவல்
- செலவு குறைந்த நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த ஊக்குவித்தல்
- சொட்டுநீர் பாசனம்
- துல்லிய விவசாயம்

**6. பல்வகைப்படுத்தல் மற்றும் மதிப்பூட்டல்**

- ஒரே பயிர் சார்ந்திருப்பதை குறைக்க பயிர் பல்வகைப் படுத்தலை ஊக்குவித்தல்
- மதிப்பூட்டும் செயல்பாடுகளை மேம்படுத்துதல்:
- செயலாக்கம்
- பொதியிடல்
- சந்தையில் விலை பேசும் திறனை உயர்த்துதல்
- வணிகக் குறியிடல்

**7. உறுப்பினர் பங்கேற்பை மேம்படுத்துதல்**

- வழக்கமான கருத்து பகிர்வு மற்றும் நன்மை பகிர்வு (benefit-sharing) முறைகள் மூலம் உறுப்பினர்களின் செயலில் பங்கேற்பை ஊக்குவித்தல்.
- கூட்டுச் செயல்பாடுகளின் முக்கியத்துவத்தை விளக்கும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல்.

**8. கொள்கை ஆதரவு மற்றும் அரசு உதவி**

- உள்ளூர் வேளாண்மை துறையுடன் ஒருங்கிணைந்து தேவையான நேரத்தில் அரசு ஆதரவும் திட்ட தகவல்களும் பெறுதல்.
- மாவட்ட அளவில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு தனித்துவமான ஒருங்கிணைப்பாளர் அல்லது உதவியாளர் நியமித்தல்.

**9. சமூக பங்கேற்பு மற்றும் உட்சேர்ப்பு**

**உழவர் உற்பத்தியாளர் உறுப்பினர்களின் தீர்மானக் குழுவில் கீழ்க்கண்டவர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல் :**

- பெண்கள்
- சிறு மற்றும் குறைந்த நிலம் கொண்ட விவசாயிகள்
- பட்டியல் சாதியினர் / பட்டியல் பழங்குடியினர் சமூக உறுப்பினர்கள்

● அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் சமமான பங்கேற்பை உறுதி செய்யும் நிர்வாக அமைப்பை உருவாக்குதல்.

தகவல் : முனைவர் ஆர்.அகிலா, (வேளாண்மை விரிவாக்கம்), முனைவர் அ.புனிதா, முனைவர் த.லா.ப்ரீத்தி, (தோட்டக்கலைத் துறை), முனைவர்கள் க.சிவகாமி, சு.ம.சுரேஷ்குமார், ஆ.ப. சீனிவாசப் பெருமாள், (உழவியல் துறை), முனைவர் வி.அ.விஜய சாந்தி (பூச்சியியல் துறை), முனைவர் செ.தமிழ்செல்வி (பயிர் வினையியல் துறை), முனைவர் கோ.குமரேசன் (வேளாண் நுண்ணுயிரியியல் துறை), முனைவர் செ.சுதாஷா, (தாவர நோயியல் துறை), முனைவர் ப.யோக மீனாட்சி மற்றும் முனைவர் சி.பானுமதி (பயிர் இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), வேளாண்மை அறிவியல் நிலையம், திரூர், திருவள்ளூர் மாவட்டம். **முற்றும்.**

